# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது

අංක 1758/23 - 2012 මැයි 16 වැනි බදාදා - 2012.05.16

*1758/23 ஆம் இலக்கம் - 2012 ஆம் ஆண்டு மே மாதம் 16 ஆந் திகதி புதன்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I : தொகுதி (I)- பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**இலங்கையின் தேசிய விளையாட்டுத்துறைக் கொள்கை**

*2011.11.16 ஆந் திகதியிடப்பட்டு* Amapa *11/2008/552/019 என இலக்கமிடப்பட்டதும், 2012.01.17 ஆந் திகதியிடப்பட்டு* Amapa *12/0090/552/002 என இலக்கமிடப்பட்டதுமான அமைச்சரவைப் பத்திரங்கள் மற்றும் 2012.05.08 ஆந் திகதிய 15 ஆம் இலக்க அமைச்சரவைத் தீர்மானத்திற்கிணங்க, 2012.05.08 ஆந் திகதி பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட்ட இலங்கையின் தேசிய விளையாட்டுத்துறைக் கொள்கையை, இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 1973 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க விளையாட்டுத்துறைச் சட்டத்தின் 41 ஆம் பிரிவின் உபபிரிவுகளின் (1), (2) மற்றும் (3) கீழ் எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களிற்கிணங்க, இத்தால் அறிவிக்கின்றேன்.*

*மகிந்தானந்த அளுத்கமகே (பா. உ.),*<br>
*விளையாட்டுத்துறை அமைச்சர்.*

*விளையாட்டுத்துறை அமைச்சு,*<br>
*கொழும்பு,*<br>
*2012, மே 15.*

**இலங்கையின் தேசிய விளையாட்டுத்துறைக் கொள்கை**

*முன்னுரை :*

*இலங்கையின் விளையாட்டுத்துறை வரலாற்றுத் தடத்தையும் நாம் பின்னோக்கிப் பார்க்கின், 1948 ஆம் ஆண்டை ஒரு பொற்காலமாக விவரிக்க முடியும். ஏனெனின், சர்வதேச ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டியில் இலங்கை ஒரு வெள்ளிப் பதக்கத்தை வெற்றி கொண்டது இவ்வருடத்திலேயே ஆகும்.*

*இவ்வருடத்தில் 400 மீற்றர் தடை தாண்டல் போட்டியில் டங்கன் வைற் என்பவர் ஒரு வெள்ளிப்பதக்கத்தை வெற்றி கொண்டதுடன், இலங்கையின் விளையாட்டுத்துறையானது பல ஏற்ற இறக்கங்களுடன் அதனது பாதையில் கடந்த 63 ஆண்டுகளாக முன்னோக்கிப் பயணித்து வருகின்றது. 2000 ஆம் ஆண்டு, சிட்னியில் நடைபெற்ற ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டியில் சுசந்திகா ஜெயசிங்க வெள்ளிப்பதக்கத்தை வெற்றி கொண்டமை, அண்மைக்காலத்தில் இலங்கை வெற்றி பெற முடிந்த உயரிய விருதாகும். இதற்கிடையில், பொதுநலவாய விளையாட்டுப் போட்டிகள், உலக சம்பியன்சிப், ஆசிய விளையாட்டுப் போட்டிகள் மற்றும் தென்னாசிய விளையாட்டுப் போட்டிகளில் இலங்கை பல விருதுகளைச் சுவீகரித்து நாட்டிற்கு பெருமை தேடித் தந்துள்ளது.*

*1996 ஆம் ஆண்டு, கிரிக்கெட் உலகக் கிண்ணத்தை வெற்றி கொண்டமை, இரு தடவைகள் இரண்டாம் இடத்தைப் பெற்றுக் கொண்டமை ஆகியன, கிரிக்கெட்டில் ஒரு உலகத் தலைமை என்ற மிக உயரிய இடத்திற்கு இலங்கையை எடுத்துச் சென்றுள்ளது.*

ஆனால் கடந்த தசாப்தத்தில், தவிர்க்க முடியாத காரணங்களால் இலங்கையின் விளையாட்டுத்துறையானது சில பின்னடைவுகளைச் சந்தித்து வருகின்றது. 3 தசாப்தத்திற்கு மேலாக நாட்டில் நிலவிய போர்ச்சூழ்நிலை மற்றும் இளைஞர்களிடையே நிலவிய அமைதியின்மை என்பன இளம் சந்ததியினரிடையே விளையாட்டுத்துறையில் இருந்த ஈடுபாட்டைத் தடை செய்தது. நீண்ட காலத்திற்கு பின்னர் நாட்டில் தோன்றிய அமைதி, தேசத்தின் சமாதானம், ஒற்றுமை மற்றும் செல்வச் செழிப்பு என்பவற்றை மிகச் சிறந்த முறையில் விளையாட்டுத்துறையில் பயன்படுத்துவதற்கான காலம் வந்துள்ளது. ஆகையால், குழு மனப்பாங்குடன் முன்னோக்கி நடைபோடக்கூடிய கூறுசுறுப்பான, ஒழுக்கம் மிக்க இளைஞர்கள் தங்களது விளையாட்டுத் தனித்திறன்களை மெருகேற்றுவதன் மூலம், இளைய சந்ததியினரின் நல்லாரோக்கியத்திற்காக விளையாட்டுத்துறையைப் பயன்படுத்துவதற்கான சந்தர்ப்பம் நேர்ந்துள்ளது. அதே சமயம், இலங்கையை “ஆசியாவின் ஆச்சரியம்” ஆக உருவாக்கும் எமது முயற்சியில், இலங்கையை விளையாட்டுத்துறையில் ஒரு கவர்ச்சிகரமான இடமாகக் கட்டியெழுப்ப வேண்டியுள்ளமையால், ஒரு புதிய விளையாட்டுத்துறைக் கலாசாரத்தை தொடர்ச்சியாக உருவாக்கி, நாட்டின் பொருளாதார அபிவிருத்திக்கான பங்களிப்பை வழங்கி, விளையாட்டுத்துறை மூலம் தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துவதற்கான அவசியம் நேர்ந்துள்ளது.

இத்தகைய பரந்த நோக்குடன், இலங்கையின் விளையாட்டுத்துறையை ஒரு முறையான திட்டமிடலுடன் அறிவியல்சார் பாதையில் விருத்தி செய்து, விளையாட்டுத்துறை தொடர்பான தேசிய கொள்கையை வெளியிடுவதற்கு இங்கு முன்மொழியப்படுகின்றது. இது தொடர்பாக கவனம் செலுத்தும் சகல பிரிவினரும் இக்கொள்கையைக் கடைப்பிடிப்பார்கள் என்ற நம்பிக்கை உள்ளது.

நாட்டின் பொருளாதார அபிவிருத்தியில் ஒரு தீவிர பங்காளராக விளையாட்டுத்துறையை உருவாக்கி, இலங்கையில் பல்வேறு வகையான விளையாட்டுக்களை விருத்தி செய்வதற்கு இங்கு முன்மொழியப்படுகின்றது. சுற்றுலாத்துறையின் அபிவிருத்தியில் விளையாட்டுத்துறையையும் பயன்படுத்திக்கொள்ள முடியும். குறிப்பாக கிரிக்கெட்டில் சர்வதேச ரீதியில் பெற்றுக்கொண்ட புகழ் மற்றும் அங்கீகாரத்தை இந் நோக்கத்திற்காகப் பயன்படுத்த முடியும். அதேசமயம் குழிப்பந்தாட்டம் (Golf), அலையாடல் (Surfing) மற்றும் ஏனைய நீர் விளையாட்டுக்களிற்குப் பொருத்தமான வாய்ப்புக்கள் மற்றும் சாத்தியக் கூறுகள் இலங்கையில் உள்ளன. இதைத் தவிர உல்லாசப் பயணிகளைக் கவரும் நோக்கில் மோட்டார் பந்தயம், மலை ஏறுதல், கடற்கரை விளையாட்டுக்கள், மற்றும் குதிரைப் பந்தயம் ஆகிய விளையாட்டுக்கள் பெரியளவில் ஊக்குவிக்கப்பட்டு மேம்படுத்தல் வேண்டும்.

மூலப்பொருட்கள் மற்றும் திறமை வாய்ந்த கலை வல்லுநர்களின் உதவியுடன் விளையாட்டுத்துறைசார் கைத்தொழில்களை விருத்தி செய்தல் மற்றுமொரு அம்சமாகும். இலங்கையில் எளிதல் உற்பத்தி செய்யக்கூடியவாறு உள்ளதும், உடனடிய சந்தை வாய்ப்பைக் கொண்டதுமான பாரியளவான கேள்வியைக் கொண்டுள்ள விளையாட்டு உபகரணங்கள் மற்றும் கருவிகளின் உற்பத்தியை மேற்கொள்ளும் எதிர்கால முதலீட்டாளர்களிற்கு ஊக்கமளித்தல் வேண்டும்.

விளையாட்டுத்துறையுடன் தொடர்புபட்ட மனித வளங்களை நாம் அபிவிருத்தி செய்ய வேண்டும் எனவேதான், அவர்கள் சர்வதேச பயிற்றுவிப்பாளர்கள் மற்றும் விளையாட்டு ஆலோசகர்களாக சேவையாற்ற முடியும். இத்தகைய செயற்பாடுகளை விருத்தி செய்வதற்கான ஏராளமான வாய்ப்புக்கள் இலங்கையில் உள்ளன.

வருடம் முழுவதும் வெளிநாட்டு விளையாட்டு வீரர்களிற்கு, விளையாட்டுத்துறையில் பயிற்சிகளைப் பெறும் சர்வதேச பயிற்சி மையமாக நாட்டினை உருவாக்குவதற்கு இலங்கையில் நிலவும் சாதகமான காலநிலையைப் பயன்படுத்த முடியும்.

இந்நிலையில், ஒரு நன்மை பயக்கத்தக்க பொருளாதார நடவடிக்கையாக விளையாட்டுத்துறை கருதப்படவேண்டியுள்ளதுடன் இதற்கான ஆதரவிற்கான பகுப்பாய்வு மற்றும் முன்னேற்பாடுகளும் தேவைப்படுகின்றன.

இத்தகைய விரிவான கருத்துக்களைக் கொண்ட இப்பார்வை மற்றும் மேற்கூறப்பட்ட அனைத்து விடயங்களையும் கருத்திற் கொண்டு, இலங்கையின் விளையாட்டுத்துறையை மேம்படுத்துவதற்காக, ஒரு முறைப்படுத்தப்பட்டதும், அறிவியல் பூர்வமானதுமான விளைாட்டுத்துறைக் கொள்கையை அறிவிப்பதற்கு இங்கு முன்மொழியப்படுகின்றது. இவ்வண்ணம் விளையாட்டுத்துறையுடன் தொடர்புபட்டுள்ள சகல தரப்பினரும் முன்மொழியப்பட்ட விளையாட்டுத்துறைக் கொள்கைக்கு அமைவாக செயற்படுவார்கள் என நம்பப்படுகின்றது.

**நோக்கு :**

விளையாட்டுத்துறையில் பலமான ஆசிய நாடாக இலங்கையை உருவாக்குதல்.

***பணி* :**

விளையாட்டுத்துறையில் வெற்றிக் கேடயங்களின் தேசமாக இருத்தல்.

ஒரு ஆரோக்கியமான, ஒழுக்கமான, ஐக்கியமான மற்றும் வளமான சமுதாயம்.

**இலக்குகள் :**

1. *இலங்கையின் கலாசாரம் மற்றும் சமூகத்தில் ஒரு பகுதியாக விளையாட்டுத்துறையைக் கொண்டிருத்தல் ;*
2. *சகல இலங்கையர்களினதும் வாழ்க்கைத் தரம், உடல் நலம் மற்றும் ஆரோக்கியத்தை உயர்த்துவதற்காக விளையாட்டுத்துறையைப் பயன்படுத்திக்கொள்ளல்.*
3. *ஒவ்வொருவரும் விளையாட்டுத்துறையில் பங்குபற்றி அதன் நன்மைகளைப் பெறுவதற்கான அறிவு, வழிமுறை மற்றும் சந்தர்ப்பத்தை வழங்குதல்.*
4. *சகலதையும் உள்ளடக்கியதான விளையாட்டுத்துறை அபிவிருத்திக்குகந்த உட்கட்டமைப்பு மற்றும் தேவையான வளங்களை உருவாக்குதல்.*
5. *விளையாட்டுத்துறையில் உள்ளார்ந்த ஆற்றல் கொண்ட உச்சப் பயனடைதல் மற்றும் ஒரு வெற்றிகரமான விளையாட்டுத்துறைத் தேசம் என்ற சர்வதேசக் கருத்துருவை வெளிப்படுத்தி நிலைத்திருத்தலை உறுதிப்படுத்துவதற்காக ஒவ்வொரு இலங்கையருக்கும் உதவுதல்.*
6. *இலங்கையில் ஒரு விளையாட்டுத்துறைக் கைத்தொழிலை விருத்தி செய்தல், புதிய வேலைவாய்ப்புக்களை உருவாக்குதல் மற்றும் பொருளாதார வளர்ச்சியின் முன்னேற்றத்திற்குப் பங்களித்தல்.*
7. *இலங்கை, அந்நியச் செலாவணியை ஈட்டிக் கொள்வதற்கான பிரதான துறையாக விளையாட்டுத்துறையைப் பயன்படுத்திக் கொள்ளல்.*
8. *சமாதானம் மற்றும் சமூக இணக்கத்தினை விளையாட்டுத்துறையினூடாக ஏற்படுத்தல்.*

**தேசிய விளையாட்டுத்துறைக் கொள்கையின் முதன்மை மூலக்கூறுகள் :**

*1. ஒவ்வொரு பிரஜையும் ஒரு விளையாட்டு வீரன் .*

*ஒழுக்கக் கோட்பாடுகளின் அறிவுடன் விளையாட்டுத்துறையின் நன்மைகள் மற்றும் விளையாட்டு வசதிகள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்களை பயன்படுத்துதல், நாடு முழுவதிலும் விளையாட்டுத்துறை மற்றும் பொதுப் பொழுதுபோக்கில் பெரும் எண்ணிக்கையானவர்களைப் பங்குபற்றச் செய்வதற்கும், ஒரு ஆரோக்கியமான சக்திமிக்க ஒழுக்கமுள்ள தேசத்தை தோற்றுவிப்பதற்கும், விளையாட்டுத்துறையில் ஆர்வமுள்ளவர்களாக ஒவ்வொரு பிரஜையையும் உருவாக்குவதன் மூலம் விளையாட்டுத்துறை அபிவிருத்திக்கு முன்னுரிமை வழங்குதல்.*

*மக்கள் அவர்களுடைய உடல் உள ரீதியான ஆரோக்கியத்தை உறுதிப்படுத்துவதற்கும் மிக இளமைக்காலங்களில் இருந்து விளையாட்டுத்துறையில் ஈடுபாடு கொண்டு அவர்களை ஒழுக்கமுள்ள பிரஜைகளாக உருவாக்குவதற்கான ஒரு ஆர்வத்தை விளையாட்டுத்துறையில் தோற்றுவிப்பதற்கும், குழு மனப்பாங்கு, தலைமைத்துவம், நாட்டில் உள்ள சகல பிரஜைகளுடனும் ஒற்றுமையாக வாழ்தல் மற்றும் மனித விழுமியங்களில் இவ்வாறு செய்வதன் மூலம், மனித ஒழுக்கக் கோட்பாடுகளில் அக்கறையுள்ள ஒரு ஆரோக்கியமான ஒழுக்கமுள்ள ஒரு ஒற்றுமையான தேசத்தின் தோற்றத்தை உறுதிப்படுத்தல் என்பது நாளடைவில் சாத்தியமாகும்.*

***2. புதிய விளையாட்டுத்துறைக் கலாசாரம் :***

*இலங்கையில் ஒரு "விளையாட்டுத்துறைக் கலாசாரத்தை" நிறுவுவதற்கு ஊக்கமளித்தல்.*

*விளையாட்டுத்துறையின் மீது ஒரு நாட்டத்தைக் கொண்டிருத்தல், விளையாட்டுத்துறையின் மதிப்பைப் புரிந்து கொள்ளல் மற்றும் விளையாட்டுத்துறையை அவர்களது வாழ்க்கையின் ஒரு பகுதியாகக் கொள்ளல் போன்றவற்றிற்கு மக்களை ஊக்குவிப்பதன் மூலம் ஒரு விளையாட்டுத்துறைக் கலாசாரம் உருவாக்கப்பட முடியும்.*

***3. நல்ல ஆரோக்கியத்திற்கு முன்னுரிமை :***

*சமுதாயத்தின் சகல அம்சங்களையும் உள்ளடக்கிய சிறந்த உடல் ஆரோக்கிய நல நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்துவதற்கு ஊக்குவித்தல்.*

*ஒரு ஆரோக்கியமான தேசத்தை உருவாக்குதல் என்பதன் அதி முக்கியத்துவத்தை சகல பிரஜைகளினதும் ஆரோக்கியம் மற்றும் உடற்தகுதி என்பவற்றிற்கு கொடுக்கப்பட வேண்டியதுடன், பாரியளவில் விளையாட்டுத்துறை மற்றும் உடற்தகுதி நிகழ்ச்சிகளில் பங்குபற்றுதலை ஊக்குவித்து, உள்ளூர் சத்துணவுகள் மற்றும் சமநிலை உணவு ஆகியவற்றின் நுகர்வில் விசேட கவனம் செலுத்துவதானது அதிகரித்து பயன்பாட்டுடனான ஒரு ஆரோக்கியமான தேசத்தை இறுதியில் உருவாக்கும்.*

**4. பொழுதுபோக்கிற்காக விளையாட்டு :**

*பொழுதுபோக்கில் தனிநபர் மற்றும் குழுக்களின் பங்குபற்றலில் உள்ள ஈர்ப்பு விளையாட்டுத்துறையில் அவர்களை உயரளவில் பங்குபற்றுவதற்கு கருத்தூன்றச் செய்யும் ஒரு வழிவகையாக இருக்கின்றதுடன், மிக மும்முரமான உடல் சார் நடவடிக்கைகளில் உயர்மட்ட ஆற்றல்களை அடைவதற்கான ஒரு பாதையை அவர்களிற்கு வழங்கி போட்டித்தன்மை மிக்க விளையாட்டுக்களில் ஈடுபாடு வரச் செய்தல்.*

விளையாட்டுத்துறைச் சட்ட ஒழுங்கு விதிமுறைகளிற்கு கீழ்ப்படிவதுடன் தனிநபர்களைக் கவர்வதற்குத் தனியான பொழுதுபோக்கு நடவடிக்கைகளை ஊக்குவிப்பதற்கான தேவை நேர்ந்துள்ளது. போட்டித் தன்மைமிக்க விளையாட்டுத்துறையில் பெருமளவான விளையாட்டு நபர்கள் பயிற்சிகளிற்கு பதிவு செய்வதை அதிகரித்து உயர்தர ஆற்றல் மற்றும் திறமைகளை அடைவதற்கான பாதையை வழங்குதல்.

**5. அமைதி மற்றும் அபிவிருத்திக்காக விளையாட்டுத்துறை :**

*சமுதாயத்தில் நீடித்திருக்கத்தக்கதான அமைதி மற்றும் சமூக அபிவிருத்திக்காக விளையாட்டுத்துறைக்கு முன்னுரிமை வழங்குதல், மக்களை ஒன்றிணைத்தல், இனத்துவ முரண்பாடுகளைத் தகர்த்தல், பாரபட்சங்களை இல்லாமல் செய்தல், பலமான ஆரோக்கியமான மற்றும் மகிழ்ச்சிகரமான சமூகத்தைக் கட்டியெழுப்புவதில் விளையாட்டானது உள்ளார்ந்த ஆற்றலைக் கொண்டிருப்பதுடன் சிநேகத்துவம் மற்றும் கூட்டுச் செயற்பாட்டினூடாகப் புரிந்து கொள்ளல் என்பவற்றின் முற்போக்கு அபிவிருத்தி மற்றும் சமூக, பொருளாதார அபிவிருத்தியினைத் துரிதப்படுத்துவதற்கும் விளையாட்டுத்துறையானது பயன்படுத்தப்படும்.*

**6. விளையாட்டில் விருப்புடைய இளம்பராயத்தினருக்கு ஒரு ஒளிமயமான எதிர்காலம் :**

*நாட்டின் எதிர்காலத்தினை இளம்பராயத்தினர் உருவாக்கும் காரணத்தினால், அவர்களின், வினைத்திறன், அபிவிருத்தி மற்றும் உடல் உள ரீதியான ஆரோக்கியத்திற்கு தலைசிறந்த ஒன்றாக விளையாட்டுத்துறையை விரும்புவதற்கு இளையோர் குழாம்களை ஊக்குவித்தல்.*

நாட்டின் எதிர்காலம் இளைய சந்ததியில் தங்கியிருக்கின்றமையால் அவர்களை ஆரோக்கியமான. செயற்றிறனுடைய ஒரு வினைத்திறன் மிக்க குழாமாக உருவாக்க வேண்டியுள்ளமையால், அவர்களிடையே விளையாட்டுத்துறையினை ஊக்குவிப்பதற்கு முன்னுரிமை வழங்கப்பட வேண்டும். அவர்களுடைய எதிர்கால வாழ்வு முழுவதும் நல்லாரோக்கியத்தைப் பேணுவதற்காக, அறிவாற்றல்களை விளையாட்டுத்துறையினூடாக வழங்கி, ஊழியர் படையில் நன்மை பயக்கத்தக்க விளைவுகளைப் பெறுவதற்கும் இலங்கையை உயர் நிலைக்கு உயர்த்துவதற்காகவும் மன ஒருமைப்பாட்டுடன் ஏனைய பிரஜைகளுடன் இணைந்து உழைக்க வேண்டும்.

**7. தனித்திறன் கொண்ட விளையாட்டு வீரர்களை அடையாளம் காணுதல் :**

*சகல பாடசாலைச் சிறுவர்களும் இளையோரும் விளையாட்டுத் துறையில் உயர் செயற்திறன்களை அடைவதற்காக, அவர்களின் உள்ளார்ந்த தனித்திறன்கள் மதிப்பிடப்படல் வேண்டும்.*

பேரளவான போட்டிகளில் சிறுவர்கள் உயர்ந்த நிலையை அடைவதற்கு அவர்களது உண்மையான உள்ளார்ந்த ஆற்றல்கள் அறியப்பட்டும், உள, உடல் சார்ந்த விளையாட்டுக்களில் உள்ள தனித்திறன்களை அடையாளங்காண்பதற்கான முறைமைகள் தாபிக்கப்பட்டு, சகல சிறுவர்கள் மற்றும் இளையோர்களின் திறன்கள் முன்வைக்கப்படுதல் முக்கியத்துவமானதாகும்.

**8. பாடசாலையிலிருந்து விளையாட்டுத்துறைக்கு :**

*பாடசாலைப் பாடவிதானத்தில் விளையாட்டுத்துறைக்கல்வி, பயிற்சி மற்றும் உடல் ஆரோக்கியத்திற்கு முன்னுரிமை வழங்குதல்.*

சிறுவர்களுக்கு ஒரு சமத்துவமான கல்வியை வழங்குவதனூடாக, திறமையான விளையாட்டு வீரர்களை உருவாக்கி விளையாட்டுத்துறைக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டு, தேவையான உடல்சார் பண்புகள் மற்றும் திறன்கள் விருத்தி செய்யப்பட்டு, கல்விச் செயற்பாடுகளை வகுப்பறையில் மேம்படுத்துவதற்கான அடித்தளம் விளையாட்டுத்துறையில் இடப்பட வேண்டும்.

**9. கிராமங்களிற்கு விளையாட்டுக் கழகங்கள் :**

விளையாட்டுத்துறையில் சகல அம்சங்களும் விருத்தி செய்யப்பட்டு கிராம சேவையாளர் பிரிவு மற்றும் பிரதேச செயலளார் பிரிவு மட்டங்களிற்கு எடுத்துச் செல்லப்பட்டு, கொழும்பு அல்லது நாட்டின் வேறு பகுதிகளில் மாத்திரம் கிடைக்கும் அரிதான பிரத்தியேக அறிவு, நிபுணத்துவம் மற்றும் அனுபவம் என்பவற்றை முழு நாடும் பெறுவதற்கு வழிவகை செய்தல்.

விளையாட்டுத்துறையில் செய்யப்படுகின்ற முதலீடுகளிலிருந்து நன்மைகளை ஓரிடத்திலிருந்து சகலரும் பெறக்கூடியவாறும் அறிவு, நிபுணத்துவம். அனுபவம் மற்றும் வளங்கள் இலங்கையின் சகல மக்களுக்கும் கிடைக்கக்கூடியவாறான ஒழுங்குமுறை மற்றும் செயற்திறனூடன் கூடிய முகவர்களினதும் அலுவலர்களினதும் வலைப்பின்னல் தாபிக்கப்படல் வேண்டும்.

*10.* **விளையாட்டுக் கழகங்களிற்கான உதவிகள்** :

*நாடு முழுவதிலுமுள்ள அதிக விளையாட்டுக் கழகங்களின் உருவாக்கத்தினால் மாகாண மற்றும் தேசிய விளையாட்டுத்துறைச் சங்கங்கள் ஊக்குவிக்கப்பட்டு வலுப்பெறுதல் :*

*ஏற்கனவேயுள்ள கழகங்களைப் பலப்படுத்துவதுடன் புதிய கழகங்களை உருவாக்குவதற்கு ஆதரவளித்து, புதிய வீரர்களிற்கான பாதையைத் தாபிப்பதன் மூலம் சமூக மட்ட விளையாட்டுத்துறையில் அதிக பங்குபற்றலை மேம்படுத்துதல் மற்றும் சகல தேசிய மாகாண விளையாட்டுத்துறைச் சங்கங்களின் அங்கத்துவத்தை அதிகரித்தல்.*

*11.* **விளையாட்டுத்துறையில் உலகளாவிய அறிவு** :

*உயரிய சர்வதேசப் போட்டிகளில் விளையாட்டுத்துறை வீர வீராங்கனைகளை சகல தொடர்புடைய துறைகளையும் பின்பற்றி, வெளிநாட்டு வீரர்களுடன் போட்டியிடுவதற்கும் சர்வதேச போட்டிகளில் ஈடுபடுத்துவதற்கான வெளிநாட்டுப் பயிற்சிகள், தொழில்நுட்பம் மற்றும் விசேட அறிவு என்பவற்றைப் பெறுவதற்கான சந்தர்ப்பத்தை உருவாக்குதல்.*

*சர்வதேச மட்டத்திலான விளையாட்டுத்துறை நிகழ்வுகளை வெல்வதற்கு, அண்மைக்கால அறிவியல் மற்றும் தொழில்நுட்ப அறிவு, பயிற்சி , அனுபவம் என்பவற்றைப் பெறவேண்டிய தேவை அவசியமாக உள்ள காரணத்தால், விளையாட்டு வீரர்கள் சர்வதேச மட்டத்திலான பயிற்சியாசிரியர்கள், சர்வதேச விளையாட்டுத்துறை நிறுவனங்கள், நிபுணர்கள் மற்றும் சர்வதேச அனுபவத்தைப் பெறுவதற்கான சந்தர்ப்பங்கள் போன்றவற்றிற்கான உதவிகளைப் பெறுவதற்கு ஊக்குவிக்கப்படல் வேண்டும்.*

*12.* **விளையாட்டுத்துறையில் பெண்களை முன்னிலைப்படுத்தல்** :

*விளையாட்டுத்துறையில் பெண்களிற்கு ஈடுபாடு ஏற்படுவதற்கான சந்தர்ப்பத்தை வழங்குதல் .*

*பெண்கள் விளையாட்டுத்துறையில் அவர்களது தனித்திறன்களை வெளிக்காட்டுவதற்கான சந்தர்பத்தினை வழங்குவதற்காக அவர்களின் விளையாட்டுத்துறைப் பங்களிப்பானது ஊக்குவிக்கப்பட வேண்டும். சகல பெண்களிற்கும் விளையாட்டுத்துறையில் பங்குபற்றலில் உள்ள நன்மைகளும் முக்கியத்துவமும் எடுத்துக்காட்டப்பட வேண்டுமென்பதுடன், அவர்களது உடல் நலம், மகிழ்ச்சிக்காக விளையாட்டுத்துறையில் பங்குபற்றுவதற்கான சந்தர்ப்பத்தை வழங்கி, உயரிய விளையாட்டு நிகழ்வுகளில் உயர்நிலையை அடைவதற்கு ஊக்குவித்தல் மற்றும் இலங்கையில் வீராங்களைகளின் வீதத்தை அதிகரித்தலும் முக்கியத்துவமானது. ஒலிம்பிக் விளையாட்டுக்கள், பொதுநலாய விளையாட்டுக்கள், ஆசிய விளையாட்டுக்கள், உலக சம்பியன்சிப் போன்றவற்றில் குழுவாக பங்குபற்றலை ஊக்குவித்தல்.*

*13.* **வினையாட்டுத்துறையில் முதியோர் பங்குபற்றல்** :

*விளையாட்டுத்துறையில் முதியோர்களிற்கு ஈடுபாடு வரச்செய்வற்கான சந்தர்ப்பத்தை வழங்குதல்.*

*முதியோர்கள் நோய்களால் அதிகம் பாதிக்கப்படுவதால் அவர்களிற்கு குடும்பத்தின் ஆதரவு தேவையாகவுள்ளது. ஓய்வுபெற்றோர் மற்றும் முதியோர்களிற்கு விளையாட்டுத்துறை நடவடிக்கைகளை ஒழுங்குபடுத்துவதானது, பொதுவாக ஏற்படும் நோய்த் தாக்கத்திலிருந்து விடுபடுதல் மட்டுமல்லாது, அவர்களது நேரடியான பங்குபற்றல் மூலம் அவர்களுக்கான செலவுகள் மற்றும் அரச பணம் மீதப்படுத்தப்படும்.*

*14.* **விசேட தேவையுடைய நபர்களை விளையாட்டுத்துறையில் முன்னிலைப்படுத்தல்** :

*உள மற்றும் உடல் ரீதியான ஆரோக்கிய விருத்தி, பொழுதுபோக்கு மற்றும் ஆளுமை விருத்திக்காக, மாற்றுத்திறனாளிகளை விளையாட்டுத்துறையில் பங்குபற்றுவதற்கு ஊக்குவித்தல்.*

*இயற்கைக் காரணங்களால் அல்லது சமூகப் பேரிடர்களால் அங்கவீனமுற்ற நபர்களை சமுதாயத்தின் ஒரு முக்கிய பிரிவாக பராமரிக்க வேண்டியுள்ளதுடன், அவர்களை ஊக்குவிக்க வேண்டிய தேவை உள்ளமையால், மகிழ்வூட்டல், பொழுதுபோக்கு, ஆளுமை விருத்தி மற்றும் விளையாட்டுப் போட்டிகளில் உயர் சிறப்படைதல் போன்ற நோக்கங்களை ஈட்டுவதற்காக, விளையாட்டுத்துறையில் அவர்களை ஈடுபடுத்திக் கொள்வதற்கான வசதிகளை வழங்குதல் நாளாந்த நடவடிக்கைகளில் மாற்றுத்திறனாளிகளை ஒன்றிணைத்து செயற்படுத்துவதற்கான ஒரு செயல்முறை தாபிக்கப்படல் வேண்டும்.*

*15.* **நிறுவனம் சார்ந்த அபிவிருத்தி ஊடாக ஒரு பலமான விளையாட்டுத்துறை ஒழுங்கமைவு வலைப்பின்னல்** :

*சட்டச் செயல்முறை அடிப்படை, முகாமைத்துவ அபிவிருத்தி மற்றும் விளையாட்டுத்துறை அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டக் கட்டமைப்புகளைச் சீரமைத்தல்,*

எதிர்கால அபிவிருத்தி நடவடிக்கைகளின் வெற்றிக்காக, நவீன சமுதாய மாற்றங்களுடன் இணைந்து, விளையாட்டுத்துறை அமைப்புக்களின் நிறுவனம் சார்ந்த சட்ட மேலாண்மை தொடர்பான விளையாட்டுத்துறை அபிவிருத்தி நடவடிக்கைகளிற்காக பணியாற்றுதல்.

விளையாட்டுத்துறை நிறுவனங்கள் மற்றும் முகவர்கள் தொடர்பான சட்டம், நல்லாட்சி, முகாமைத்துவம் மற்றும் செயற்பாட்டு அம்சங்கள் முக்கியத்துவமானதுடன், விளையாட்டுத்துறை தொடர்பாக கவனம் செலுத்துகின்ற சகல நிறுவனங்களின் வினைத்திறன் மற்றும் தீர்மானம் எடுத்தல் ஆகிய சகல நடவடிக்கைகளிலும் வெளிப்படைத் தன்மை, நல்லாட்சி என்பவற்றை உறுதிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். விளையாட்டுத்துறை நிர்வாகத்துடன் தொடர்புள்ள பல்வேறுபட்ட நிறுவனங்களிற்கிடையில் வேறுபாடற்ற மற்றும் ஒருங்கிணைப்பினை உறுதிப்படுத்துவதற்கான முறைமை தாபிக்கப்படுதல் வேண்டும்.

*16.* **சுதந்திரமான விளையாட்டுத்துறை நிறுவனங்கள்** :

*விளையாட்டுத்துறை அமைப்புக்களின் சுதந்திரத்தை உறுதிப்படுத்துவதற்கு அவசியமான சூழலை உருவாக்குதல் :*

*விளையாட்டுத்துறை அமைப்புக்களிற்கு சுதந்திரமான நபர்களைத் தேர்தலின் மூலம் உறுதிப்படுத்துவற்குச் சட்ட ஏற்பாடுகளை அறிமுகப்படுத்துவதற்கான அவசியம் உள்ளது.*

*17.* **விளையாட்டுத்துறை அபிவிருத்திக்கான ஒரு கூட்டு அணுகுமுறை** :

விளையாட்டுத்துறைக்குப் பொறுப்பாகவுள்ள அரச மற்றும் மாகாண சபை அமைச்சுக்கள் ஊடாக, விளையாட்டுத்துறை அபிவிருத்திக்காக ஒரு ஒருங்கிணைந்த அணுகுமுறையினை அமுல்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல்.

அரசாங்க மற்றும் மாகாண சபை விளையாட்டுத்துறையுடன் தொடர்புபட்ட நிறுவனங்களினால் ஒருங்கிணைந்த அணுகுமுறை மூலம் விளையாட்டுத்துறை அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள் கவனமாகத் திட்டமிடப்பட்டு மேற்கொள்ளப்படவேண்டியதுடன், தேசிய விளையாட்டுத்துறைச் சங்கங்கள், மாகாண, மாவட்ட மற்றும் பிராந்திய மட்ட விளையாட்டுக் கழகங்களை உள்ளடக்கிய நிகழ்ச்சித் திட்டம் நிச்சயமாக இடம்பெற வேண்டும். முழு விளையாட்டுத்துறை அபிவிருத்திக்கும், சகல அடையாளப்படுத்தப்பட்ட பங்காளர்களினால் ஒரு தேசிய தந்திரோபாயத்திட்டம் தாபிக்கப்படல் வேண்டும்.

*18.* **கிராமங்களில் விளையாட்டுத்துறை வசதிகள்** :

*கிராமத்திற்கு விளையாட்டுத்துறையை எடுத்துச் செல்லும் நோக்கில் நாடு முழுவதிலும் விளையாட்டுத்துறை அபிவிருத்திக்குத் தேவையான வசதிகளை அதிகரிப்பதற்கு ஊக்குவித்தல்.*

கிராமப்புற இளைஞர்களின் விளையாட்டுத் தனித்திறனை மேம்படுத்தும் நோக்குடன், தேசிய விளையாட்டுத்துறை உட்கட்டமைப்பு அபிவிருத்தித் திட்டத்திற்கமைவாக, கிராம மட்டத்தில் விளையாட்டு அபிவிருத்தி வசதிகள் செய்யப்பட்டு, சர்வதேச விளையாட்டுப் போட்டிகளில் வெற்றி பெறுவதற்கும் நிபுணத்துவம் மற்றும் பொருத்தமான பயிற்சி பெறுவதற்கும் அவர்களை ஊக்குவித்தல் வேண்டும். ஒவ்வொரு பிரதேசத்திலும் விளையாட்டுத்துறைச் சேவையின் வகை. பயன்படுத்துவோரின் எண்ணிக்கை, விளையாட்டுத்துறை வசதிகள், அமைந்துள்ள இடம் அவற்றின் கட்டமைப்பு மற்றும் தரம் என்பன வகைப்படுத்தப்பட்டு, தரவுத்தளம் பேணப்பட வேண்டும்.

*19. பிரதேச பெருமைமிக்க பாரம்பரிய விளையாட்டுத்துறை* :

*பாரம்பரிய தேசிய விளையாட்டுக்களின் பிரபல்யம் மற்றும் அபிவிருத்தி என்பவற்றை ஊக்குவித்தல் :*

எமது கலாசாரத்தின் ஒரு பகுதியாக உள்ள தேசிய விளையாட்டுக்களானது, மிகத் தொன்மையானவையால், அவை பிரபல்யப்படுத்தப்படுவதுடன் இவை தொடர்பான பாரம்பரிய அறிவு சமுகத்தால் அழியாது பாதுகாக்கப்படுவதுடன், வருங்கால சந்ததிக்காகவும் பாதுகாக்கப்படல் வேண்டும். அவற்றைப் பாதுகாப்பதற்காக அவைகளை சேகரித்தல் மற்றும் கிரகித்தல் தொடர்பான ஒரு நிகழ்ச்சித்திட்டம் ஆரம்பிக்கப்படல் வேண்டும்.

**20. பயன்பாட்டிற்கான மனித வள அபிவிருத்தி** :

*விளையாட்டுத்துறை அபிவிருத்திக்காகத் தொழிற்படும் பொது நிறுவனங்களின், பலம்மிக்க வழிகாட்டலின் மூலம், விளையாட்டுத்துறையின் வெவ்வேறு துறைகளில் திறன்மிக்க மக்கள், இயலளவு அபிவிருத்தி மற்றும் மனிதவள அபிவிருத்தியை தாபிப்பதற்கு ஒரு பொருத்தமான விளையாட்டொழுங்கை நிறைவேற்றுதல் .*

விளையாட்டுத்துறை முன்னேற்றத்தில் ஈடுபாடுள்ள அரச நிறுவனங்களின் செயற்றிறன் ஊக்குவிப்பை வழிப்படுத்த, முகாமைத்துவ அபிவிருத்தி நடவடிக்கைகளைச் செய்தலுடன் அத்தகைய நிறுவனங்களின் மனிதவள அபிவிருத்தியை முன்னெடுப்பதற்கு நடவடிக்கைகள் ஊக்குவிக்கப்பட வேண்டும். விளையாட்டுத்துறையில் தொழில்நுட்ப மற்றும் நிர்வாகப் பயிற்சிகளைப் பெறுவதற்கு, மக்கள் ஊக்குவிக்கப்பட்டு முறைசார்ந்த ஒப்புதலுடன் ஒழுங்குகள் தாபிக்கப்படுதல் முக்கியமானது. பயிற்றுவிப்பாளர்கள், அலுவலர்கள் மற்றும் பல்வேறுபட்ட நிர்வாகத்தினர்களின் எண்ணிக்கைகள் மற்றும் பிரதேசங்கள் என்பன வகைப்படுத்தப்பட்டு, அவர்களது பிரதேசங்களின் பொருத்தமான அபிவிருத்தி நடவடிக்கைகள் ஒரு தரவுத்தளத்தில் பதியப்படல் வேண்டும்.

**21. விளையாட்டுத்துறையில் தொண்டர்களின் ஆதரவு** :

*விளையாட்டுத்துறையில் தொண்டர்களாகச் செயற்படுவதற்கு பிரஜைகளை ஊக்குவித்தல் :*

விளையாட்டுத்துறையில் தொண்டராகச் செயற்படுபவர்கள் :

(அ) ஆட்சேர்ப்பு ;

(ஆ) பாதுகாத்தல் ;

(இ) அடையாளங்காணல் என்பவற்றிற்கு ஒரு ஒழுங்குமுறை தாபிக்கப்படல் வேண்டும். ஒரு நாளாந்த அடிப்படையில் ஒரு குறிப்பிட்ட தொகை நபர்கள் சேவையாற்றுவதை அதிகரிப்பதற்கு இவை உதவி புரிவதுடன் நாடு பூராகவும் தொண்டர்களது நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துவதற்கு சகல விளையாட்டுத்துறை முகவர்களினதும் ஆதரவு பயன்மிக்கதாகும்.

**22. அனைவருக்கும் விளையாட்டுத்துறை மருத்துவ வசதிகள்** :

*நாடு முழுவதற்குமான விளையாட்டுத்துறை மருத்துவ வசதிகளை விரிவாக்குவதற்கான உதவிகளை வழங்குதல் .*

விளையாட்டுத்துறை நடவடிக்கைகளில் ஈடுபாடு கொண்டுள்ள அனைவருக்கும் மாகாண மற்றும் மாவட்ட மட்டத்தில் விளையாட்டுத்துறை மருத்துவ வசதிகளை விரிவுபடுத்துவதற்கான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். விளையாட்டு வீரர்கள் மற்றும் பயிற்றுவிப்பாளர்களிற்கு மருத்துவ அறிவுடன் கல்விச் சேவை வழங்கப்படுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். காயங்கள் ஏற்படுவதைத் தடுப்பதில் விளையாட்டுத்துறை மருத்துவ வழிகாட்டல் முன்னிலை வகிக்கின்றது.

**23. சர்வதேச தரம் மற்றும் சம்பிரதாயங்களைப் பின்பற்றுதல்** :

*சர்வதேச ஒலிம்பிக் சாசனத்திற்கமைவாக, விளையாட்டுத்துறை அபிவிருத்திக்குத் துணை புரியும் சகல விளையாட்டுத்துறைச் சங்கங்கள் மற்றும் நிறுவனங்களை ஊக்கப்படுத்தும் அதே சமயம், சர்வதேச தரத்திற்கமைவாக தெரிவு, பயிற்சி மற்றும் விளையாட்டுத்துறை நபர்களின் முகாமைத்துவம் போன்றவற்றிற்கும் ஊக்குவிப்பு வழங்கப்படல் வேண்டும்.*

சர்வதேச விளையாட்டுத் தரத்திற்கமைவாக தெரிவு, பயிற்சி, முகாமைத்துவம், ஒழுக்காற்று நடவடிக்கைகள் மற்றும் விளையாட்டுப் போட்டி ஒழுங்குபடுத்தல் என்பன இடம்பெற வேண்டும் என்பதுடன், இது தொடர்பான சகல வேலைகளும் சர்வதேச ஒலிம்பிக் சாசனத்திற்கு மதிப்பளித்துச் செய்யப்படல் வேண்டும்.

**24. ஊக்க மருந்துகள் மற்றும் போதைப்பொருள்கள் பாவனையைத் தடை செய்தல்** :

*உலகப் போதைப்பொருள் பாவனைக்கெதிரான முகவராண்மை அமைப்பினால், தடை செய்யப்பட்ட ஊக்க மருந்துகள் மற்றும் போதைப் பொருள்கள் பாவனை தொடர்பான சட்டங்கள் அமுல்படுத்தப்படும். உலகில் ஐக்கிய நாடுகள் சபை சாசனம் மற்றும் போதைப்பொருள் பாவனைக்கெதிரான முகவரகம் என்பவற்றால் தடை செய்யப்பட்ட ஊக்க மருந்துப் பாவனை மற்றும் போதைப்பொருள் பாவனை தொடர்பான விதிகள் மற்றும் ஒழுங்குமுறைகள் என்பவற்றிற்கு, இலங்கையின் விளையாட்டுத்துறை வீரர்கள் கீழ்ப்படிவுள்ளவர்கள் என்பதை உறுதிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். விளையாட்டுத்துறைப் போதைப்பொருள் தந்திரோபாயக்கல்வி அறிமுகப்படுத்தப்பட்டு, விளையாட்டுத்துறையில் தடைசெய்யப்பட்ட ஊக்க மருந்து உற்பத்தி விநியோகம் மற்றும் பாவனை என்பவற்றில் ஈடுபட்டுள்ள நபர்களிற்கெதிராக, வழக்குத்தாக்கல் செய்வதற்கு ஒரு நிறுவனத்திற்கு அதிகாரம் வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்தல்.*

**25. சர்வதேசப் போட்டிகளிற்கு அரச உதவிகள் :**

*சார்க் விளையாட்டுக்கள் ஆசிய விளையாட்டுக்கள், பொதுநலவாய விளையாட்டுக்கள் மற்றும் ஒலிம்பிக் விளையாட்டுக்களில் பங்குகொள்ளும் விளையாட்டுத்துறை நபர்களிற்கு முழு அரச உதவிகள் வழங்கப்படல் வேண்டும்.*

சர்வதேசப் போட்டிகளில் கலந்துகொள்ளும் விளையாட்டுத்துறை நபர்கள் மற்றும் அவர்களுடன் கலந்து கொள்ளும் அரசாங்க மற்றும் விளையாட்டுத்துறைச் சங்கங்களின் உத்தியோகத்தர்கள் ஆகியோரிற்கு ஒரு வரையறுக்கப்பட்ட முறையில் முழு அரச உதவிகள் வழங்கப்படல் வேண்டும்.

**26. உயர் கல்விக்கான சிறப்புரிமையானது, தனித்திறனுள்ள விளையாட்டு வீரரிற்கு வழங்கப்படல் :**

*உயர் கல்விக்காக, பல்கலைக்கழக மற்றும் ஏனைய நிறுவனங்களிற்கான அனுமதியில், தேசிய விளையாட்டுப் போட்டிகளில் வெற்றி பெற்ற பாடசாலைச் சிறுவர்களிற்கு விசேட தனிச்சலுகை வழங்கப்படல் வேண்டும்.*

பல்கலைக்கழகத்திற்கான அல்லது வேறு உயர் கல்வி நிறுவனங்களிற்கான அனுமதியைப் பெறும்போது தேசிய மற்றும் சர்வதேச விளையாட்டு நிகழ்வுகளில் தனித்திறமை காட்டிய விளையாட்டு வீரர்களிற்கு விசேட சிறப்புரிமை வழங்கப்படும்.

**27. விளையாட்டுத் தொழிற்றுறைக் கல்வி :**

*தேசிய விளையாட்டுப் போட்டிகளில் பல வெற்றிகளை ஈட்டிய விளையாட்டு வீரர்களிற்கு அவர்கள் விளையாட்டுத்துறையில் ஈடுபடும் வரையில் விசேட உதவிகளும் சலுகைகளும் வழங்கப்படல் வேண்டும்.*

தமது இளமைக் காலத்தை பயிற்சி மற்றும் போட்டிகளிற்காக அர்ப்பணித்த விளையாட்டு வீரர்களிற்கு, விசேட சிறப்புரிமை மற்றும் சலுகை வழங்கப்பட்டு அவர்களது சாதாரண பாடசாலைக் கல்வியைப் பூர்த்தி செய்வதற்கும் எதிர்காலத்தில் வேலைவாய்ப்பை ஊக்குவிக்கும் கற்கை நெறிகள் தொடர்பான கல்வி நிறுவனங்கள் மற்றும் பல்கலைக்கழக அனுமதியைப் பெறுவதற்கும் சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொடுத்தல் வேண்டும்.

**28. விளையாட்டுத்துறையில் உயர்கல்வி மற்றும் ஆராய்ச்சி :**

*பட்டமளித்தல், பட்டமேற்படிப்புகள், ஆய்வுகளை மேற்கொள்ளல் மற்றும் உள்ளூர் சர்வதேச நிறுவனங்களுடன் இணைந்து பணியாற்றுவதற்கு ஊக்குவித்தல் மற்றும் தேசிய நிறுவனங்களின் அபிவிருத்திக்கான ஊக்குவிப்பை வழங்குதல்.*

தேசிய விளையாட்டுத்துறைப் பாடசாலை, தேசிய விளையாட்டுத்துறை விஞ்ஞான நிறுவனம் என்பவற்றின் மூலம் பட்டமளித்தல், பட்டமேற்படிப்பு, மற்றும் விளையாட்டுத்துறையில் ஆய்வு நடவடிக்கைகள் போன்றவற்றை தேசிய மற்றும் சர்வதேச பல்கலைக்கழகங்கள் மற்றும் ஆராய்ச்சி நிறுவனங்கள் என்பவற்றுடன் இணைந்து பணியாற்றுவதுடன் இவ்விரு நிறுவனங்களையும் மீள ஒழுங்கமைத்து விளையாட்டுத்துறை விஞ்ஞானம், பட்டமேற்படிப்பு, விளையாட்டுத்துறை மருத்துவப் பட்டங்கள் மற்றும் விளையாட்டுத்துறை மருத்துவத்தில் மேற்பட்டப்படிப்பு போன்ற பட்டங்களிற்காக உள்ளூர் பல்கலைக்கழகங்களில் கற்கை நெறிகளை ஆரம்பித்தல்.

**29. உலகத்தரம் வாய்ந்த விளையாட்டு வீரர்களிற்கான விசேட தனிச் சலுகைகள் :**

*சர்வதேச நிகழ்வுகளில் வெற்றிபெற்ற வீரர்களிற்கு, விளையாட்டுத்துறையில் அரசாங்க வேலைகள் வழங்குகையில் விசேட சலுகைகளும், தனியார் பிரிவில் வேலைவாய்ப்பு பெறுகையில் விசேட ஊக்குவிப்புக்களும் வழங்கப்படும்.*

உள்ளூர் மற்றும் சர்வதேச விளையாட்டு நிகழ்வுகளில் வெற்றி பெற்றவர்களிற்கு பொதுத்துறை மற்றும் தனியார் துறையில் வேலை வாய்ப்பிற்கான சந்தர்ப்பங்கள் வழங்குகையில் விசேட தனிச்சலுகைகள் வழங்கப்படுவதுடன், அவர்கள் வேலை செய்யும் காலத்திலேயே விளையாட்டு நிகழ்வுகளில் பங்குபற்றுவதற்கான விசேட சலுகைகள் வழங்கப்படும்.

**30. அனுபவம் வாய்ந்தவர்களிற்கு அங்கீகாரம் :**

*சார்க் விளையாட்டுக்கள், ஆசிய விளையாட்டுக்கள், பொதுநலவாய விளையாட்டுகள் மற்றும் உலக ஒலிம்பிக் விளையாட்டுக்களில் மதிப்பையும் பாராட்டையும் வென்ற அனுபவம் வாய்ந்த விளையாட்டுத்துறை வீர வீராங்கனைகள் கௌரவிக்கப்படல் வேண்டும்.*

சர்வதேச விருதுகளை வென்ற சகல கைதேர்ந்த விளையாட்டு நபர்களிற்கும் தேசிய விருதுகளுடன் ஊக்குவிப்புக்களும் வழங்கப்படும். ஒழுங்குவிதிகளுக்கமைவாக தேசிய விருதுகள், பண ஊக்குவிப்புக்களுடன் இணைத்து வழங்கப்படல் வேண்டும்.

*31.* **விளையாட்டுத்துறையில் அனுபவம் வாய்ந்தவர்களிற்கான உதவிகள் :**

*சர்வதேச விருதுகளை வென்ற கைதேர்ந்த விளையாட்டுத்துறை நபர்களை ஊக்குவிக்கும் அதே சமயம் அவர்கள் நன்மையடையும் விதத்தில் பணிக்கமர்த்தப்படுவதனால் அவர்களது நிபுணத்துவம் புதிதாக வருபவர்களிற்கு பகிர்ந்தளிக்கப்பட முடியும்.*

புதிய விளையாட்டுத்துறை சார்ந்த நபர்களுடன் கைதேர்ந்த விளையாட்டுத்துறை வீரர்கள் தமது நிபுணத்துவ அறிவைப் பகிர்ந்து கொள்வதற்கு வரையறுக்கப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்கள் ஒழுங்குபடுத்தப்படும்.

*32.* **கைதேர்ந்த விளையாட்டுத்துறை நபர்களைப் பாதுகாத்தல் :**

*இலங்கைக்கு நற்பெயரை ஏற்படுத்தி தேசிய மற்றும் சர்வதேச விருதுகளை வென்ற விளையாட்டுத்துறை நபர்களிற்காக ஒரு சமூக பாதுகாப்பு நிகழ்ச்சித்திட்டத்தை அறிமுகப்படுத்தல்.*

தேசிய மற்றும் சர்வதேச விருதுகளை வென்ற விளையாட்டுத்துறை நபர்களைப் பாதுகாத்துப் பராமரிக்கும் நோக்கில் தேசிய பாதுகாப்பு நிகழ்ச்சித் திட்டமொன்றை அமுல்படுத்தல்.

*33.* **விளையாட்டுத்துறைக்கான ஒரு சுதந்திரமான நியாய சபை :**

*விளையாட்டுத்துறை தொடர்பான பிணக்குகளை விசாரிப்பதற்கு ஒரு சுதந்திரமான தீர்ப்பாயம் மற்றும் ஒரு மத்தியஸ்த சபை நிறுவப்படும்.*

விளையாட்டுத்துறையில் தோன்றும் பிணக்குகளைத் தீர்ப்பதற்கும் ஒழுக்காற்று விடயங்கள் சுதந்திரமானதும், தெளிவானதுமான முறையில் கருத்தூன்றப்படுவதற்கும் ஒரு சுதந்திரமான நியாய சபை மற்றும் ஒரு மத்தியஸ்த சபை ஸ்தாபிக்கப்படும்.

*34.* **விளையாட்டுத்துறைக்கான வரி விலக்கு :**

*விளையாட்டுத்துறையுடன் தொடர்புபட்ட தேசிய விளையாட்டுத்துறைச் சங்கங்கள் மற்றும் அரசாங்க நிறுவனங்கள் என்பவற்றால் இறக்குமதி செய்யப்படும் மூலப்பொருட்கள் மற்றும் உபகரணங்கள் சகல வரிகளிலுமிருந்து விலக்களிக்கப்படல் வேண்டும்.*

விளையாட்டுத்துறைச் சங்கங்கள் மற்றும் அவைகளின் அங்கத்தவர்களின் பாவனைக்காக விளையாட்டுத்துறையுடன் தொடர்புபட்ட அரசாங்க நிறுவனங்களால் இறக்குமதி செய்யப்படும் விளையாட்டுத்துறை மூலப்பொருட்கள், உபகரணங்கள், விளையாட்டுத்துறை மருத்துவ உபகரணங்கள், மருந்துகள் மற்றும் போசாக்குணவுகள் போன்றவற்றிற்கு வரி நிவாரணம் வழங்கப்படுதல் வேண்டும்.

*35.* **விளையாட்டுத்துறைக்குத் துணை புரிபவர்களிற்கு வரி நிவாரணம் :**

*விளையாட்டுத்துறை அபிவிருத்திக்காக பல்வேறு உதவிகளை வழங்குகின்ற தனியார் நிறுவனங்களிற்கு வரி நிவாரணம் வழங்கப்படுதல் வேண்டும்.*

விளையாட்டுத்துறை அபிவிருத்திக்காக விளையாட்டுத்துறை அமைப்புக்கள் மற்றும் அதனுடன் தொடர்புபட்ட அரசாங்க நிறுவனங்களிற்கு பல்வேறுபட்ட உதவிகளை வழங்குவதற்காக தனியார்துறைக்கு வரி நிவாரணம் வழங்கப்படுதல் வேண்டும்.

*36.* **விளையாட்டுத்துறைச் சங்கங்களிற்கான வர்த்தக ஒழுங்கமைப்பு முறை :**

*பொருளாதார ரீதியில் வெற்றிக்கு இட்டுச் செல்லக்கூடிய விளையாட்டுத்துறைச் சங்கங்களைப் பயன்மிகு அலகுகளாகப் பேணுதல்.*

விளையாட்டுத்துறைசார் பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்யும் நோக்குடன், வர்த்தக ரீதியில் வெற்றிக்கு இட்டுச் செல்லக்கூடிய அலகுகளாக விளையாட்டுத்துறைச் சங்கங்களை விருத்தி செய்வதற்கான ஊக்குவிப்புக்கள் வழங்கப்படுதல்.

*37.* **ஒவ்வொரு வேலைத்தளத்திலும் விளையாட்டுத்துறைக்கான சந்தர்ப்பம் :**

*தொழில் செய்யுமிடத்தில் விளையாட்டுத்துறையின் பயன்பாடு ஊக்குவிக்கப்படவேண்டியுள்ளதுடன் இதனால் கிடைக்கும் பலன்கள் தொழிற்படையினரால் உணரப்படும்.*

தொழிற்படையினரின் ஆரோக்கியம், நல் நிலைமை, சிறந்த மனநிலை என்பவற்றில் விளையாட்டுத்துறையானது சாதகமான தாக்கத்தை ஏற்படுத்தும். இந் நோக்கத்திற்காக நேரம், அவசியமான வசதிகள், ஆதரவு மற்றும் அவசியமான சூழல் என்பவற்றை தொழிற்படைக்கு ஏற்படுத்திக் கொடுத்தல் அவசியமாகின்றது.

**38. மக்கள் தொடர்பு ஊடகங்களில் விளையாட்டுத்துறைக்கு முன்னுரிமை :**

*பொதுமக்களிடையே உற்சாகத்தை தோற்றுவித்தல் மற்றும் கல்வியை வழங்குதல் விளையாட்டுத்துறை மற்றும் விளையாட்டுத்துறை நபர்களிற்கு ஒரு ஆக்கபூர்வமான ஊடக நிகழ்ச்சி விபர அறிக்கையை வழங்குவதற்கு ஊக்குவித்தல், விளையாட்டுத்துறை நபர்கள் ஒரு ஒழுங்குமுறையில் ஊக்குவிக்கப்படுவதற்கு நடுநிலையான மற்றும் ஆக்கபூர்வமான பிரசாரங்கள் மூலம் விளையாட்டுத்துறை அபிவிருத்தியானது உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.*

அச்சு மற்றும் இலத்திரனியல் ஊடகங்கள் விரிவான மற்றும் பயனுள்ள நிகழ்ச்சிகளை வழங்கி விளையாட்டுத்துறையை மக்களிடையே ஒரு ஒழுங்கு முறையில் பிரபல்யப்படுத்துவதன் மூலம் மக்கள் விளையாட்டுத்துறையில் ஆர்வத்தைப் பெறுகின்றனர்.

**39. ஒரு தேசிய விளையாட்டுத்துறைத் தகவல் நிலையம் மற்றும் நூதனசாலை :**

*உள்ளூர் மற்றும் வெளிநாட்டு விளையாட்டுக்கள், தகவல் தரவுகள், அண்மைக்கால தொழில்நுட்பத்துடன் விளையாட்டுத்துறையை நிர்வகிப்பதற்கான விதிகள், ஒழுங்குகள் தொடர்பான சகல அவசியமான தகவல்களை வழங்கக்கூடியதும், விளையாட்டுத்துறை தொழில்நுட்ப தகவல்கள் மற்றும் அபிவிருத்தி ஆராச்சி, புள்ளி விவரங்கள், விதிகள் மற்றும் ஒழுங்குகள் உள்ளடங்கலான, ஒரு தேசிய விளையாட்டுத்துறைத் தகவல் நிலையம் ஸ்தாபிக்கப்படல் வேண்டும்.*

விளையாட்டு வீரர்கள், பயிற்றுவிப்பாளர்கள், அலுவலர்கள், நிர்வாகத்தினர் ஆகியோரிற்கு நேர ஒழுங்கில் அவசியமான தகவல்களைப் பரப்புவதற்கு, தேசிய விளையாட்டுத்துறைத் தகவல் நிலையம் (தே. வி. த. நி.) சகல தேவையான தகவல்கள், புள்ளி விபரங்கள் மற்றும் தரவுகள் என்பவற்றைச் சேகரித்து, சேமித்து வைப்பதற்கான ஒரு ஒழுங்குமுறை தாபிக்கப்படுவதுடன், அவர்கள் ஒழுங்குமுறையிலான நவீன தகவல்களை அறிந்து கொள்வதற்கும் வாய்ப்பாக அமையும். வரலாற்று ரீதியான விளையாட்டுத்துறை ஆவணங்கள், புகைப்படங்கள், மூலப்பொருட்கள், உபகரணங்கள் மற்றும் ஏனைய பொருத்தமான படைப்புக்கள் என்பவற்றை சேமித்துக் காட்சிப்படுத்துவது தே. வி. த. நி. யின் செயற்பாடாகும்.

**40. விளையாட்டுத்துறைக்கான ஒழுக்கவியல் தொடர்பான கோட்பாடுகள் :**

*விளையாட்டுத்துறையில் ஈடுபட்டுள்ள சகலராலும் விளையாட்டுக்கள் தொடர்பான ஒழுக்கவியல் கோட்பாடுகள் பின்பற்றப்படல் வேண்டும்.*

விளையாட்டுத்துறைக்கு ஒரு ஒழுக்கவியல் தொடர்பான கோட்பாடு அறிமுகப்படுத்தப்பட்டு சகலராலும் பின்பற்றப்படுவதுடன் அதனது மதிப்பு மற்றும் நாணயத்தைப் பாதுகாக்கும் நோக்குடன் சகலரும் அதற்குக் கீழ்ப்படிய வேண்டும்.

**41. இலங்கை விளையாட்டுத்துறைக்கு மிகச் சிறப்புமிக்க இடமாக இருத்தல் :**

*சர்வதேச விளையாட்டு நிகழ்வுகளை நடாத்துவதற்கு ஒரு சிறப்புமிக்க மையமாக இலங்கை பிரபல்யப்படுத்தப்படுவதுடன் விளையாட்டுத்துறைப் பொருளாதாரத்தை கட்டியெழுப்புவதற்கும் ஊக்குவிக்கப்படும்.*

இலங்கையின் இயற்கையான அமைவிடம் மற்றும் அதனது பேரளவான வளங்களைப் பயன்படுத்தி சர்வதேச விளையாட்டுப் போட்டிகளை நடாத்துவதற்கு ஏற்ற வகையில் கவர்ச்சிகரமானதொரு மையமாக உருவாக்கப்பட வேண்டியதுடன் இதனூடாக பொருளாதார அபிவிருத்தியை ஏற்படுத்தக்கூடிய ஒரு புதிய பாதை திறக்கப்பட முடியும்.

**42. சுற்றுலாப் பயணிகளை ஈர்ப்பதற்கான விளையாட்டுக்கள் :**

*சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கக் கூடியவாறான விளையாட்டுக்களை ஊக்குவிப்பதற்கான உதவிகளை வழங்குதல் :*

விளையாட்டுத்துறையை மேம்படுத்தி ஊக்குவிப்பதற்கான முன்னுரிமையை வழங்குவதுடன் பிரபலமான கேளிக்கைகளிற்கான ஒரு வழிமுறையாக சாகச அனுபவங்கசளை ஏற்படுத்தி உல்லாசப் பயணிகளிற்கான சுவர்க்க புரியாக இலங்கையை உருவாக்குதல்.

**43. பொருளாதாரத்தில் ஒரு முக்கிய அம்சமாக விளையாட்டுத்துறை சார் கைத்தொழில்களை உருவாக்குதல் :**

*விளையாட்டுத்துறைசார் உபகரணங்கள் மற்றும் சேவைகளின் உற்பத்தி மற்றும் விநியோகத்திற்கு ஊக்குவிப்புக்களை வழங்குதல்.*

*விளையாட்டுத்துறையுடன் இணைந்து வேலைவாய்ப்பிற்கான சந்தர்ப்பங்களை உருவாக்குவதன் மூலம், உள்ளூர் மூவப்பொருட்கள் மற்றும் மனித வலுவைப் பயன்படுத்தி உற்பத்தி செய்யப்படும் விளையாட்டுத்துறைசார் பொருட்களின் உற்பத்தி, ஏற்றுமதி ஊக்குவிப்பு மற்றும் விளையாட்டுத்துறை உபகரணங்களின் பதிலீடுகளின் இறக்குமதிக்கான அந்நியச் செலாவணி வருமானத்தை ஈட்டும் துறையினை ஊக்குவித்து நிவாரணங்களை வழங்குதல்.*

**44. விளையாட்டுத்துறை ஊடான வாய்ப்புக்கள் :**

*விளையாட்டுத்துறையில் வேலைவாய்ப்பிற்கான சந்தர்ப்பங்களை அடையாளங் கண்டு கொள்வதுடன் சர்வதேச தரநிலைகளிற்கமைவான தொழில்சார் பயிற்சிகளை வழங்கி உள்ளூர் மற்றும் சர்வதேச விளையாட்டுத்துறையில் வேலைவாய்ப்பிற்கான சந்தர்ப்பங்கள் வழங்கப்படுதல்.*

*அனுபவமிக்க தொழில்சார் பயிற்றுவிப்பாளர்கள், மருத்துவத்துறையில் அனுபவமிக்க நபர்கள், விளையாட்டு முகாமையாளர்கள், ஒழுங்கமைப்பாளர்கள், இயன்மருத்துவர்கள், மசாஜ் செய்பவர்கள் போன்ற துறைகளில், வேலைவாய்ப்பிற்கான சந்தர்ப்பங்களை அடையாளங் காணல். குறித்த துறைகளில் தொழில்சார் பயிற்சியை வழங்குவதுடன் உள்ளூர் மற்றும் சர்வதேச வேலைவாய்ப்பிற்கான மனித வளங்களை விருத்தி செய்தல்.*

**45. கேளிக்கை விளையாட்டுக்களினூடான பொருளாதார நன்மைகள் :**

*பொருளாதார நன்மைகளை நோக்காகக் கொண்ட கேளிக்கை விளையாட்டுக்களைப் பிரபல்யப்படுத்துவதற்கான ஊக்குவிப்புக்களை வழங்குதல்.*

*இலங்கையின் பல்வேறு பகுதிகளில் கிடைக்கக்கூடியதாகவுள்ள பல்வகை வளங்கள் மற்றும் சந்தர்ப்பங்களைப் பயன்படுத்தி ஆக்கபூர்வமான விதத்தில் பல்வேறு கேளிக்கை விளையாட்டுக்களை அறிமுகப்படுத்துவதன் மூலம் பொருளாதார நன்மைகளை ஏற்படுத்துவதற்கும், உள்ளூர் மற்றும் மேலைத்தேய விளையாட்டு வீரர்களைக் கவரும் நோக்கிலும் கேளிக்கை விளையாட்டுக்களைப் பிரபலப்படுத்துவதற்கான ஊக்குவிப்புக்களை வழங்குதல்.*

*6- 98*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.